வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், கங்கர்செவல் ஊராட்சி மன்ற தலைவர் / செயல் அலுவலரின் நடவடிக்கைகள்

முன்னிலை: C.கலாசந்திரசேகரன்

குடியிருப்பு மனைபிரிவு அனுமதி எண்: 1 /2024 நாள்: 8.2.2024

பொருள் : குடியிருப்பு மனைபிரிவு அங்கீகாரம் வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் கங்கர்செவல் ஊராட்சி / கிராமம் சர்வே எண்கள். 627/1A1B, 627/1B, 631/1, 632/2, விஸ்தீரணம் 11646.00 சதுர மீட்டர் (2.88 ஏக்கர்) பரப்பளவுள்ள குடியிருப்பு மனை பிரிவினை அங்கீகாரம் செய்து உத்தரவிடல் தொடர்பாக...

பார்வை:
1) துணை இயக்குநர், மாவட்ட நகர், ஊரமைப்பு அலுவலக ந.க.எண்.ROC.No.SLSFHDAE. Dt. 06.02.2024
2) துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் விருதுநகர் மனைபிரிவு வரைபட ஒப்புதல் எண்.: (ம.வ./ந.ஊ.து.இ.(விருமா) எண்.: 17/2024 (O) நாள்:06.02.2024.

****

<u>உத்தரவு</u>

1. வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், கங்கர்செவல் கிராமம் / ஊராட்சி சர்வே எண்கள். 627/1A1B, 627/1B, 631/1, 632/2, விஸ்தீரணம் 11646.00 சதுர மீட்டர் (2.88 ஏக்கர்) பரப்பளவு உள்ள குடியிருப்பு மனைபிரிவு சில நிபந்தனைகளுடன் அங்கீகாரம் அளிக்கப்படுகிறது.

2. கீழராஜகுலராமன் சார்பதிவு அலுவலகத்தில் உள்ளாட்சி அமைப்புக்கு நன்கொடையாக அளித்த சாலை மற்றும் உள்ளாட்சி உபயோகம், பூங்கா அசல் ஆவண எண்: 262/2024 ஊராட்சி மன்ற அலுவலகத்தால் பெற்றுக்கொள்ளப்பட்டது.

3. பார்வை 1ல் கண்ட சிறப்பு நிபந்தனைகளின்படி கூராய்வுக் கட்டணமாக மனை ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் 47 மனைகளுக்கு மொத்தம் ரூ.47,000/ (நாற்பத்தி ஏழு ஆயிரம் மட்டும்) பெறப்பட்டுள்ளது. மேலும் நில உபயோக வகை மாற்றத்திற்காக சந்தை மதிப்பில் 3% ஏக்கர் 2 செண்டு 88க்கு ரூ.17,280/- (பதினேழு ஆயிரத்தி இருநூற்றி என்பது மட்டும்) பெறப்பட்டுள்ளது.

4. எனவே பார்வையில் கண்ட கடிதத்தில் அனுமதியளிக்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதலின்படியும் இணைத்துவரப்பெற்றுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளின் அடிப்படையிலும் உரிய கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளதால் வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் கங்கர்செவல் கிராமம்/ஊராட்சி சர்வே எண்கள். 627/1A1B, 627/1B, 631/1, 632/2, விஸ்தீரணம் 11646.00 சதுர மீட்டர் (2.88 ஏக்கர்) மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தால் அனுமதி அளிக்கப்பட்டுள்ள வரைபடத்தின்படி மனை எண்கள் 1 முதல் 47 (மொத்த மனைகளின் எண்ணிக்கை 47) மனைகள் மட்டும் அங்கீகாரம் செய்து இந்த உத்தரவு வழங்கப்படுகிறது.

5. பார்வையில் கண்ட கடிதத்தில் சொல்லப்பட்ட நிபந்தனைகள் முழுமையாக கடைபிடிக்க வேண்டும்.

நாள்:

கங்கர் செவல் ஊராட்சி
நாள்: 08.12.2024
வெம்பக்கோட்டை ஒன்றியம்

தலைவர்
கங்கர்செவல் ஊராட்சி

தலைவர்
கங்கர்செவல் ஊராட்சி
வெம்பக்கோட்டை ஒன்றியம்

நகல்:

1. மாரிக்கண்ணன்
   2/288-1, மண்குண்டாம்பட்டி, தாயில்பட்டி.
2. தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையம் (TNRERA)
   No.1A, முதல் தளம், காந்தி இர்வின் பாலச்சாலை, எக்மோர், சென்னை.
3. சார்பதிவாளர், கீழராஜகுலராமன் சார்பதிவாளர் அலுவலகம்.
4. உதவி இயக்குநர், நிலஅளவை பிரிவு பதிவேடுகள் துறை, மாவட்ட ஆட்சியர் வளாகம், விருதுநகர்.
5. வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், வெம்பக்கோட்டை.
6. மேற்பார்வை செயற்பொறியாளர், TANGEDCO, விருதுநகர்.